# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 283/2023**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 17.11.2023**

| | |
|---|---|
| **Name : ராஜ்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேட்டுப்பட்டியில் குடியிருந்து கடவுள் என்ற பெயரில் ஆம்புலன்ஸ் ஓட்டி வருகிறேன். அ.சா.2 விநாயகா ஆம்புலன்ஸ் என்ற பெயரில் ஆம்புலன்ஸ் வைத்து நடத்தி வருகிறார். ராகவன் என்பவர் கோகுலம் என்ற பெயரில் ஆம்புலன்ஸ் வைத்து நடத்தி வருகிறார். கடந்த 24.10.2022-ம் தேதி மாலை 06.30 மணிக்கு நான் மற்றும் அ.சா.2 மற்றும் ராகவன் மூன்று பேரும் மேச்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அருகே உள்ள ஆம்புலன்ஸ் ஸ்டேண்டில் நின்று கொண்டிருந்தோம். அப்போது, அருள் என்பவர் TN-52-V-9702 Passion Pro வாகனத்தில் தருமபுரி - மேச்சேரி நோக்கி இடது பக்கமாக வந்துகொண்டிருந்தபோது, அரசு மருத்துவமனை அருகே மேச்சேரி நோக்கி வந்த TVS Jupiter TN-93-1217 என்ற இருசக்கர வாகனத்தில் வந்தவர் அவருடைய வீடு அரசு மருத்துவமனை குடியிருப்பில் உள்ளதால் குடியிருப்பை நோக்கி திருப்பி சென்றபோது, பேசன் புரோ என்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. எதிரி பெயர் முருகேசன் ஆகும்.

2) முருகேசன் என்பவர் எந்தவித சைகையும் செய்யாமல் திடீரென அரசு மருத்துவமனைக்குள் செல்லும் போது விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு காரணம்

முருகேசன் ஓட்டி வந்த வாகனம் தான் காரணம் ஆகும். இதனால் அருள் என்பவருக்கு பின்தலை, வலது பக்க கன்னம், மூக்கு, காது ஆகீய பகுதியில் ரத்த காயம் ஏற்பட்டது. அ.சா.2 அவரை விநாயகா ஆம்புலன்ஸ் மூலமாக மேச்சேரி அரசு மருத்துவமனை கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார். பின்னர் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்து பின்னர் சேலம் சென்றபோது, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ஆஜர் எதிரிதான் ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டி வந்தவர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) எந்த வண்டி எதன் மீது மோதியது என்றால் Passion Pro, Scooty மீது மோதியது. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் மறுநாள் 3 மணிக்கு மேல் விசாரித்தார்கள். விபத்தை நேரடியாக எவ்வளவு தூரத்தில் இருந்து பார்த்தேன் என்றால் 10 அடி இருக்கும். சம்பவயிடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் ராகவா, மாரியப்பன், மற்றும் பசங்கள் இருந்தார்கள். நாங்கள் வந்து நின்றபிறகு விபத்து ஏற்பட்டது.

4) Passion Pro வாகனம் எவ்வளவு தூரத்தில் வருவதை நாங்கள் பார்த்தோம் என்றால் 10 அடி முன்பாக வந்ததிலிருந்து பார்த்தேன். அவர் அரசு மருத்துவமனை அருகே வந்தபோது நான் பார்த்தேன். ஸ்கூட்டியில் வந்தவர் ரோட்டை கடப்பதற்காக வளைவதற்காக நின்று கொண்டிருந்தபோது நான் பார்த்தேன்.

5) இரண்டு வாகனங்களிலும் எந்த பக்கம் சேதம் ஏற்பட்டது என்றால் முன்பக்கமாக சேதம் ஏற்பட்டது. விபத்து நடந்தவுடன் போலிசார் வந்தார்களா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் விபத்து ஏற்படவில்லை என்றும், பேசன் புரோ வாகனத்தினால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பேசன் புரோ வாகனத்தில் வந்தவர் தலைக்கவசம் அணிந்தாரா என்றால் இல்லை.

6) மிதமான வேகத்தில் வரும் போது முன்பாக வேறு எந்த வாகனம் வந்தாலும் நிறுத்த முடியும் என்றால் ஆமாம். அவ்வாறு வேகமாக வந்தால் உடனடியாக நிறுத்த முடியாது என்றால் சரிதான். ஆனால் குறைவான வேகத்தில் தான் பேசன் புரோவில் வந்தவர் வந்துகொண்டிருந்தார். பேசன் புரோவில் வந்தவரை எனக்கு தெரியுமா என்றால் விபத்திற்கு முன்பாக பார்த்ததில்லை.

7) விபத்தில் இறந்தவர் உறவினர்கள் இருவர் காவல் நிலையத்தில் தட்டச்சராக வேலை செய்வது தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காமல், இறந்தவரின் உறவினர்கள் காவல் நிலையத்தில் வேலை செய்வதால் நான் காவல் நிலையம் அருகில் ஸ்டேண்டில் ஆம்புலன்ஸ் நிறுத்துவதால் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 283/2023**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 17.11.2023**

| | |
|---|---|
| **Name : ராகவன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரியில் குடியிருந்து கோகுல் என்ற பெயரில் உள்ள ஆம்புலன்ஸ் ஓட்டி வருகிறேன். அ.சா.2 விநாயகா ஆம்புலன்ஸ் என்ற பெயரில் ஆம்புலன்ஸ் வைத்து நடத்தி வருகிறார். அ.சா.3 என்பவர் கடவுள் என்ற பெயரில் ஆம்புலன்ஸ் வைத்து நடத்தி வருகிறார். கடந்த 24.10.2022-ம் தேதி மாலை 06.30 மணிக்கு நான் மற்றும் அ.சா.2 மற்றும் அ.சா.3 மூன்று பேரும் மேச்சேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அருகே உள்ள ஆம்புலன்ஸ் ஸ்டேண்டில் நின்று கொண்டிருந்தோம். அப்போது, அருள்பாண்டியன் என்பவர் TN-52-V-9702 Passion Pro வாகனத்தில் தருமபுரி - மேச்சேரி நோக்கி சாலையின் இடது பக்கமாக வந்துகொண்டிருந்தபோது, அரசு மருத்துவமனை அருகே மேச்சேரி நோக்கி வந்த TVS Jupiter TN-93-1217 என்ற இருசக்கர வாகனத்தில் வந்தவர் அவருடைய வீடு அரசு மருத்துவமனை குடியிருப்பில் உள்ளதால் குடியிருப்பை நோக்கி திருப்பி சென்றபோது, பேசன் புரோ என்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. எதிரி பெயர் முருகேசன் ஆகும்.

2) முருகேசன் என்பவர் எந்தவித சைகையும் செய்யாமல் திடீரென அரசு மருத்துவமனைக்குள் செல்லும் போது விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு காரணம்

முருகேசன் ஓட்டி வந்த வாகனம் தான் காரணம் ஆகும். இதனால் அருள் என்பவருக்கு பின்தலை, வலது பக்க கன்னம், மூக்கு, காது ஆகீய பகுதியில் ரத்த காயம் ஏற்பட்டது. அ.சா.2 அவரை விநாயகா ஆம்புலன்ஸ் மூலமாக மேச்சேரி அரசு மருத்துவமனை கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார். பின்னர் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்து பின்னர் சேலம் சென்றபோது, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ஆஜர் எதிரிதான் ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டி வந்தவர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) எந்த வண்டி எதன் மீது மோதியது என்றால் Passion Pro, Scooty மீது மோதியது. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் மறுநாள் 04.30 மணிக்கு மேல் விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். விபத்தை நேரடியாக எவ்வளவு தூரத்தில் இருந்து பார்த்தேன் என்றால் 5 அடி இருக்கும்.

4) இரண்டு வாகனங்களிலும் எந்த பக்கம் சேதம் ஏற்பட்டது என்றால் முன்பக்கமாக சேதம் ஏற்பட்டது. விபத்து நடந்தவுடன் போலிசார் வந்தார்களா என்றால் ஆமாம். பேசன் புரோ வாகனம் எவ்வளவு தூரத்தில் வரும் போது நான் பார்த்தேன் என்றால் 50 அடி தூரத்தில் வரும் போது நான் பார்த்தேன். சம்பவத்தை யார் யார் பார்த்தோம் என்றால் அ.சா.2,3 மற்றும் நான் ஆகும்.

5) ஸ்கூட்டியில் வந்தவர் நின்றுவந்தாரா நிற்காமல் வந்தாரா என்றால் நிற்காமல் வந்தார். நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் விபத்து ஏற்படவில்லை என்றும், பேசன் புரோ வாகனத்தினால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பேசன் புரோ வாகனத்தில் வந்தவர் தலைக்கவசம் அணிந்தாரா என்றால் இல்லை.

6) மிதமான வேகத்தில் வரும் போது முன்பாக வேறு எந்த வாகனம் வந்தாலும் நிறுத்த முடியும் என்றால் ஆமாம். அவ்வாறு வேகமாக வந்தால் உடனடியாக

நிறுத்த முடியாது என்றால் சரிதான். ஆனால் குறைவான வேகத்தில் தான் பேசன் புரோவில் வந்தவர் வந்துகொண்டிருந்தார். பேசன் புரோவில் வந்தவரை எனக்கு தெரியுமா என்றால் விபத்திற்கு முன்பாக பார்த்ததில்லை.

7) விபத்தில் இறந்தவர் உறவினர்கள் இருவர் காவல் நிலையத்தில் தட்டச்சராக வேலை செய்வது தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காமல், இறந்தவரின் உறவினர்கள் காவல் நிலையத்தில் வேலை செய்வதால் நான் காவல் நிலையம் அருகில் ஸ்டேண்டில் ஆம்புலன்ஸ் நிறுத்துவதால் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 283/2023**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 17.11.2023**

| | |
|---|---|
| **Name : சந்திரசேகரன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கோல்காரனூரில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது அக்கா மகன் ஆவார். கடந்த 24.10.2022-ம் தேதி மாலை 06.30 மணிக்கு அருள்பாண்டியன் என்பவர் Passion Pro வாகனத்தில் தொப்பூர் – மேச்சேரி நோக்கி வந்துகொண்டிருந்தபோது, அரசு மருத்துவமனை அருகே மேச்சேரி நோக்கி வந்த TVS Jupiter என்ற இருசக்கர வாகனத்தில் வந்தவர் அவருடைய வீடு அரசு மருத்துவமனை குடியிருப்பில் உள்ளதால் குடியிருப்பை நோக்கி திருப்பி சென்றபோது, பேசன் புரோ என்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2) விபத்து சமயத்தில் நான் சப்ரிஜிஸ்டார் ஆபிசில் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தபோது விபத்தை நேரில் பார்த்தேன். முருகேசன் என்பவர் எந்தவித சைகையும் செய்யாமல் திடீரென அரசு மருத்துவமனைக்குள் செல்லும் போது விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு காரணம் முருகேசன் ஓட்டி வந்த வாகனம் தான் காரணம் ஆகும். இதனால் அருள்பாண்டியனுக்கு கால், பின்தலை, வலது பக்க கன்னம், மூக்கு, காது ஆகீய பகுதியில் ரத்த காயம் ஏற்பட்டது. காயம்பட்ட அருள் அவர்களை மேச்சேரி அரசு மருத்துவமனை கொண்டு சென்று

சிகிச்சைக்காக சேர்த்தார். பின்னர் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்து பின்னர் சேலம் சென்றபோது, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ஆஜர் எதிரிதான் ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டி வந்தவர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். போலிசார் என்னை எப்போது விசாரித்தனர் என்றால் விபத்து நடந்த அன்றே விசாரித்தார்கள். நான் போலிசார் விசாரணையில் இறந்தவர் எனது தம்பி என்று சொல்லவில்லை என்றால் ஆமாம்.

4) நான் விபத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்த்தேன் என்றால் 200 அடி வித்யாசத்தில் பார்த்தேன். எந்த வண்டி எதன் மீது மோதியது என்றால் ஸ்கூட்டி வாகனம் தான் Passion Pro மீது மோதியது. இரண்டு வாகனங்களிலும் எந்த பக்கம் சேதம் ஏற்பட்டது என்றால் ஸ்கூட்டி வாகனத்தின் முன்பக்கம் பேசன் புரோவின் நடுவில் மோதி விபத்து ஏற்பட்டது.

5) நானும் ஆம்புலன்சில் சென்றேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவரின் மனைவிக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் நான் தான் கொடுத்தேன். சம்பவயிடத்திற்கு போலிசார் வந்தனரா என்றால் 5 நிமிடத்தில் வந்தனர். இரண்டு வாகனங்களையும் காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றார்கள். நான் ஆம்புலன்சில் சென்றுவிட்டேன். போலிசார் தான் ஆம்புலன்ஸ்சில் என்னை அனுப்பிவைத்தனர் என்றால் நானாகத்தான் சென்றேன்.

6) நான் செல்லும்போது போலிசார் சம்பவயிடம் வந்தனர் என்றால் சரிதான். புகார் கொடுக்க காவல் நிலையம் நானும் சென்றேன் என்றால் சரிதான். நடந்த விஷயத்தை சொல்ல சொல்ல அங்கிருந்த ஏட்டு புகாரை எழுதினார் என்றால் சரிதான். புகாரில் யார் யார் கையொப்பம் செய்தோம் என்றால் நான், எனது தம்பி,

ரேவதி ஆகியோர் செய்தோம்.

7) விபத்தில் இறந்தவர் உறவினர்கள் ஒருவர் காவல் நிலையத்தில் தட்டச்சராக வேலை செய்வது தெரியுமா என்றால் ஆமாம். அவர் பெயர் ஜமுனா ஆகும். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காமல், இறந்தவர் எனது உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/−தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 283/2023**
**Prosecution witness : அ.சா.6** **Date : 17.11.2023**

| Name : பழனிசாமி | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சீராமணியூர் காட்டுவளவில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தவர் எனது அக்கா மகன் ஆவார். கடந்த 24.10.2022-ம் தேதி மாலை 06.30 மணிக்கு அருள்பாண்டியன் என்பவர் Passion Pro வாகனத்தில் தொப்பூர் – மேச்சேரி நோக்கி வந்துகொண்டிருந்தபோது, அரசு மருத்துவமனை அருகே மேச்சேரி நோக்கி வந்த TVS Jupiter என்ற இருசக்கர வாகனத்தில் வந்தவர் அவருடைய வீடு அரசு மருத்துவமனை குடியிருப்பில் உள்ளதால் குடியிருப்பை நோக்கி திருப்பி சென்றபோது, பேசன் புரோ என்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2) விபத்து சமயத்தில் நான் மேச்சேரியிலிருந்து எனது வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது விபத்தை நேரில் பார்த்தேன். முருகேசன் என்பவர் எந்தவித சைகையும் செய்யாமல் திடீரென அரசு மருத்துவமனைக்குள் செல்லும் போது விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு காரணம் ஸ்ட்டி ஓட்டி வந்த நபர்தான் காரணம் ஆகும். இதனால் அருள்பாண்டியனுக்கு கால், பின்தலை, வலது பக்க கன்னம், மூக்கு, காது ஆகீய பகுதியில் ரத்த காயம் ஏற்பட்டது. காயம்பட்ட அருள் அவர்களை மேச்சேரி அரசு மருத்துவமனை கொண்டு சென்று சிகிச்சைக்காக

சேர்த்தார். பின்னர் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்து பின்னர் சேலம் சென்றபோது, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ஆஜர் எதிரிதான் ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டி வந்தவர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) போலிசார் என்னை எப்போது விசாரித்தனர் என்றால் விசாரிக்கவில்லை. நான் எந்த வாகனத்திற்கு பின்னால் சென்றேன் என்றால் ஸ்கூட்டி வாகனத்திற்கு பின்னால் சென்றேன். எனது வாகனத்திற்கும் ஸ்கூட்டி வாகனத்திற்கும் இடையில் பல வண்டிகள் சென்றதா என்றால் ஆமாம். பேசன் புரோ வருவதை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. எந்த பாகத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் அதனை நான் பார்க்கவில்லை.

4) எந்த வாகனம் எந்த வாகனத்தின் மீது மோதியது என்றால் ஸ்கூட்டி பேசன் புரோ மீது மோதியது. அதனை நான் பார்த்தேன். எந்த பாகத்தில் மோதியது என்றால் பம்பர் மீது மோதியது. சம்பவம் நடந்தவுடன் போலிசார் அங்கே வந்தனரா என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் எத்தனை பேர் இருந்தனர் என்றால் 100 பேர் இருந்தனர். நான் இறந்தவரின் வீட்டிற்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. விபத்தில் இறந்தவர் உறவினர்கள் ஒருவர் காவல் நிலையத்தில் தட்டச்சராக வேலை செய்வது தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்காமல், இறந்தவர் எனது உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**